**அசல் வழக்கு எண். 02/2023 தேதி-23.06.2025**

**வா.சா.1 - ராஜா**

**<u>2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா சொத்தை அளவீடு செய்ய நீதிமன்றத்தில் ஆணையர் வேண்டி மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் அளவீடு செய்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் பழைய சர்வே எண்ணுக்கு தற்போதைய புதிய டவுன் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.91/1 ஆகும். சர்வே எண்.91/1 என்பது யார் பெயரில் உள்ளது என்றால் காலி நத்தமாக உள்ளது. பத்திரப்படி எனது தகப்பனாரின் பெயரில் உள்ளது. மேற்படி காலி நத்தம் அரசுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அது காலி நத்தம் ஆகும். மேற்படி காலி நத்தத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. எனக்கு 4 ¼ செண்ட் நிலம் உள்ளது. காலி நத்தமாக இருக்கும் போது எனது நிலத்தை சர்வேயர் வைத்து அளந்து சுற்று சுவர் அமைத்து காண்பிப்பதற்கு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் பிரதிவாதிகளுக்கும் எனக்கும் குற்றவியல் வழக்கு இருந்தது.

2. அதில் மேற்படி பிரதிவாதிகள் எனது நிலத்தை அளந்து காண்பிப்பதாக கூறி ஆவணம் எழுதி கொடுப்பதின் அடிப்படையில் மேற்படி குற்ற வழக்கு வாபஸ் பெறப்பட்டது. மேற்படி நான் சொன்னது படி சர்வேயர் வைத்து நிலத்தை அளந்தேனா என்றால் பிரதிவாதிகள் எனது நிலத்தை அளந்து கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் சுற்றுசுவர் எழுப்ப முயலும் போது பிரதிவாதிகள் பிரச்சனை செய்தததின் பேரில் சுற்றுசுவர் எழுப்பவில்லை. டவுன் சர்வேயர் எனது மற்றும் பிரதிவாதிகளின் நிலத்தை அளந்து அத்து காண்பித்து கொடுததாரா என்றால் அளவீடு செய்து அத்து காண்பித்தார். அதன் அடிப்படையில் நான் சுற்று சுவர் எழுப்ப முயற்சித்தேன். மேற்படி டவுன் சர்வேயர் அளவீடு செய்ததற்கான ஆவணம் ஏதும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை.

3. பிரதிவாதிகள் வசம் இருக்க வாய்ப்புள்ளது. நான் சொல்வது போல் சர்வேயர் எவ்வித அளவீடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டின் வடபுறத்தில் 2ம் பிரதிவாதி கதிரேசன் உள்ளார். மேற்படி விவரத்தை வழக்குரையின் நான்கு எல்லையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ஆனால் வடபுறத்தில் குடியிருக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள நான்கு எல்லை விவரம் தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால்

தெரியாது. அவர்களுக்கு பட்டா உள்ளதா என்றால் உள்ளது. அவர்களின் டவுன் சர்வே எண் வேறு என்றால் எனக்கு தெரியாது. எனது வீடு எத்தனை வருடங்களா உள்ளது என்றால் அது சுமார் 60 வருடங்களாக உள்ளது. மேற்படி வீடானது அரசாங்கத்தால் எனக்கும் எனது தம்பிக்கும் கொடுத்த தொகுப்பு வீடாகும்.

4. நகராட்சியில் எனக்கு தொகுப்பு வீடு கொடுத்ததற்கான உத்தரவு, ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது வழக்குரையில் தென்வடல் நகராட்சி பாதைக்கு கிழக்கில் உள்ள பாதையில் தான் அனைவரும் செல்ல முடியும் என்றால் சரியல்ல. மேற்படி பாதையின் நீளம் மற்றும் அகலம் தெரியுமா என்றால் தெரியாது. ராஜகோபால் வீட்டிற்கும், காத்தமுத்து வீட்டிற்கும் தெற்கு என நான்கு எல்லையில் குறிப்பிட்டுள்ளது பத்திரத்தின் அடிப்படையிலா என்றால் சரிதான். ஆனால் தற்போது 1,2 பிரதிவாதிகளான கதிரேசன், காமராஜ் குடியிருந்து வருகிறார்கள். வழக்குரையில் லீலாவதி நிலத்திற்கு வடக்கு என நான்கு எல்லையில் குறிப்பிட்டுள்ளப்படி தற்போது லீலாவதி குடியிருந்து வருகிறாரா என்றால் குடியிருந்து வருகிறார்.

5. மாரியாயி நிலத்திற்கும், பாசன கிணற்றிற்கும் மேற்கு என்று நான் நான்கு எல்லையில் குறிப்பிட்டுள்ளப்படி மேற்படி நிலங்கள் தற்போதும் உள்ளதா என்றால் உள்ளது. மாரியாயி நிலமும, பாசன கிணறும் எனக்கு நிலத்திற்கு கிழக்கு உள்ளது. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள நான்கு எல்லை விவரம் தவறு என்றால் சரியல்ல. நான் எனது நிலத்தில் எந்த திசையில் சுற்றுசுவர் எழுப்பினேன் என்றால் எனது நிலத்தின் வடபுறத்தில் எழுப்ப முயற்சித்தேன். தாவா சொத்தின் அளவுகள் துல்லியமாக நான் வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிட்டு காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். வா.சா.ஆ.4 ஆவணத்தில் தாவா சொத்தின் அளவுகள் எதன் அடிப்படையில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனது பத்திரத்தின் அளவு படி காண்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ஆவணம் இவ்வழக்கிற்கு எவ்வகையிலும் தொடப்பு இல்லை என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ. 5 புகைப்படங்களை யார் எடுத்தார் என்றும், குறுந்தகடை யார் பதிவு செய்தார் என்றும் 65B சான்றிதழுடன் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 புகைப்படத்தில் உள்ளவாறு மேற்படி சுற்றுசுவர் எழுப்ப எவ்வகையிலும் வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு எவ்வகையிலும் தொடர்பில்லா ஆவணங்கள் என்றும், பிரதிவாதிகளை பழிவாங்கும் நோக்கத்தில் தவறான எண்ணத்தில்

**இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai**